# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரண கூட்டம்

## 2022– ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10– ஆம் தேதி(10.06.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் நடைபெற உள்ள நகரமன்ற கூட்டத்திற்கான பொருள்கள்

பொருள்–1

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரப்பபிரிவில் 2022–23 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு பணிகள் பொது நிதியின் கீழ் மேற்கொள்ள 10.05.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதார திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள ஏதுவாக தளவாட பொருட்கள் சப்ளை செய்தல் | 9.00 | M/s.A to Z Enterprises | 0.07% குறைவு |
| | | | M/s.Connekton Pvt Ltd | 3.46% அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய M/s.A to Z Enterprises ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.556 / 2022 /எச்1

**தீர்மான எண்.91 நாள். 10.06.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்–2

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரப்பபிரிவு 2022 –23 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு பணிகளின் அவரச அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள 10.05.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத் தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள் ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கொரோனா மெகா தடுப்பூசி முகாம்கள் நடத்துவதற்கு தேவையான சாமியானா, டேபிள், சேர் வாட்டர் கேன் மற்றும் ட ஆகிய பொருட்கள் சப்ளை செய்யும் பணி | 5.00 | M/s.MSD Construction | 0.03% குறைவு |
| | | | Thiru.G.Rajesh | 1.71% அதிகம் |

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பொது நிதியின் 2022–23 கீழ் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள அவசரம் அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 491 /2020/எச்1

**தீர்மான எண்.92 நாள். 10.06.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்–3

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரப்பபிரிவில் 2022 –23 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு பணிகள் பொது நிதியின் கீழ் மேற்கொள்ள 10.05.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள் ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கான டயர்களை ரிடிரேடிங் செய்தல் பணி | 3.50 | திருவாளர்.ஸ்ரீ பைரவா கீரின் லைன்ஸ் | 0.06% குறைவு |
| | | | திருவாளர்.ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் | 0.14% அதிகம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள பொது சுகாதார பிரிவு வாகனங்கள் 6 TATA ACE வாகனங்களுக்கும் ஆண்டு பராமரிப்பு பணி | 6.00 | திருவாளர்.ஸ்ரீ பைரவா கீரின் லைன்ஸ் | 0.01% குறைவு |
| | | | திருவாளர்.ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் | 0.10% அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.556 /2022 /எச்1

**தீர்மான எண்.93 நாள். 10.06.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்–4

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 2022 –23 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு பணிகள் பொது நிதியின் கீழ் மேற்கொள்ள 11.05.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள பொது சுகாதார பிரிவு வாகனங்கள் 1 காம்பாக்டர்கள், 2 லாரி வாகனங்களுக்கும் ஆண்டு பராமரிப்பு தகுதிச்சான்று பெற பழுது பணிகள் அவ்வவ்பொழுது ஏற்படும் பழுதுகள், ஆயில்கள் மாற்றும் பணி மேற்கொள்ளுதல் | 9.00 | திருவாளர்.ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் | 0.02% குறைவு |
| | | | திருவாளர்.ஸ்ரீ பைரவா கீரின் லைன்ஸ் | 0.13% அதிகம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள பொது சுகாதாரப்பிரிவு வாகனங்கள் 2 Tractor வாகனங்களுக்கு ஆண்டு பராமரிப்பு தகுதிச்சான்று பெற பழுது பணிகள், அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள், ஆயில்கள் பணி மேற்கொள்ளுதல் | 4.00 | திருவாளர்.ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் | 0.05% குறைவு |
| | | | திருவாளர்.ஸ்ரீ பைரவா கீரின் லைன்ஸ் | **0.30 %** அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.556 /2022 /எச்1

**தீர்மான எண்.94 நாள். 10.06.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்–5

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரப்பபிரிவில் 2022 –23 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு பணிகள் பொது நிதியின் கீழ் மேற்கொள்ள 11.05.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | MCC/OCC இரண்டு 7.00 டன் கொள்ளளவு கொண்ட பசுமை நுண்ணுயிர் உரக்கூடம் , 3 சிறிய உரக்கூடங்குகளுக்கு தேவையான உயரிகலவைகள் தயாரிக்க தேவைப்படும் வெல்லம், தயிர், தவிடு, உமி மற்றும் மரத்தூள்கள் வாங்கி உரம் தயாரிக்க மற்றும் உலர் கழிவு சேகரிப்பு மையத்திற்கு தேவையான பொருட்கள் வாங்கி வழுங்குதல் பணி | 3.50 | M/s.G.K Enterprises | 0.23% குறைவு |
| | | | Thiru.G.Murali | 7.82% அதிகம் |
| 2 | பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் புகையடிக்கும் இயந்திரங்கள் பழுது பார்த்தல் பணி. | 3.00 | M/s.MSD Construction | -0.02% குறைவு |
| | | | திரு.G.ராஜேஷ் | 1.21% அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாருருக்கு பணி உத்திரவு வழங்க பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.556 /2022 /எச்1

**தீர்மான எண்.95 நாள். 10.06.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்–6

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரப்பபிரிவில் 2022 –23 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு பணிகள் பொது நிதியின் கீழ் மேற்கொள்ள 11.05.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | முதல்நிலை குப்பைகள் பிரித்து வாங்கும் வாகனங்கள் எந்த நிலையில் நிற்காமல் தினசரி பயன்பாட்டில் இருக்கும் வகையில் பராமரிப்பு மேற்கொள்ள ஆண்டு பராமரிப்பு 27 க்ஷயவவநசல டீயீநசயவநன Vehicles ஆண்டு பணி செய்தல் | 9.00 | திருவாளர்.ஸ்ரீ பைரவா கீரின் லைன்ஸ் | 0.04% குறைவு |
| | | | திருவாளர்.ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் | 1.49% அதிகம் |
| 2 | JCB வாகனம் ஆண்டு பராமரிப்பு அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள் நீக்கும் பணிக்கு | 4.00 | M/s.MSD Construction | 0.02% குறைவு |
| | | | Thiru.G.Rajesh | 0.14% அதிகம் |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.556 /2022 /எச்1

**தீர்மான எண்.96 நாள். 10.06.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்–7

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் மற்றும் வியாபார நிறுவனங்களில் குப்பைகளை பிரித்து வாங்கி அதனை உரமாக தயாரிக்கும் பணி தூய்மை பணியாளர்கள் மூலமாக நடைப்பெற்று வருகிறது. இப்பணியினை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் மட்டுமே இருகின்றார்கள். மேலும் இதர பணிகளை தெருக்களில் உள்ள சிறிய, பெரிய திறந்த வெளிக்கால்வாய்கள் உள்ளது. 33 வார்டுகளில் திறந்த வெளிக்கால்வாய்கள் சுமார்

45 KM உள்ளது. இதனை சுத்தம் செய்ய வேண்டும் என நகர் மன்ற தலைவர், நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. மேலும் கால்வாயில் உள்ள குப்பைகள், மண்களை அகற்றாமல் இருப்பின் அதன் மூலமாக கொசுக்களால் உண்டாகும் தொற்று நோய்களை கட்டுப்படுத்தவும் பொது சுகாதாரத்தை மேன்படுத்தவும் தூய்மை பணியாளர் போதுமானதாக இல்லாததால், தற்காலிகமாக A,B,C சுகாதார பிரிவிற்கு தலா 5 பணியாளர்கள் வீதம் மொத்தம் 15 தூய்மை பணியாளர்களை செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக் கூலி அடிப்படையில் 89 நாட்களுக்கு தோராய செலவினம் ரூ.6,50,000/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1720/2021/எச்1

**தீர்மான எண்.97 நாள். 10.06.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்–8

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள சம்பிலிருந்து இயங்கும் மின்மோட்டர் 60 HP Unit II –ற்கான ATS ஸ்டார் பகுதியில் பழுது சரிபட்டு முற்றிலும் கடந்த 5 மாதங்களுக்கு இயங்காமல் உள்ளது. ATS ஸ்டார்யில் உள்ள உட்புற பகுதியில் இயங்கும் பொருட்களை புதியதாக மாற்றி இயக்கத்தில் வைக்க வேண்டி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.00/– இலட்சத்திற்கு பொறியாளர் அனுமதிப் பெற்று. இவ்வகையான தொகையினை செலவிட மன்றப் பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிகான செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.98 நாள். 10.06.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்–9

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண்.27/28 காந்தி சாலை (மேட்டுத் தெரு) யில் வசித்து வந்திருந்த திரு.V. கிருஷ்ணன் என்பவரால் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.436/94 ல் தொடரப்பட்டு, இவ்வழக்கு வழக்கு லோக் அதாலத் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு கீழ்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
லோக் அதாலத் நீதிமன்றத்தில் 27.09.2002 ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு விவரம் பின்வருமாறு,

“ This case was taken up for settelement before the Lok-Adalait today at the District Court hall at Chegalpattu. The Appeallant and counsel are present. The Local bodies represented by the Commissioner Chengalpattu Municipality. The respondent

Municipality has fixed the Tax at Rs.5690/- for the IInd Half Year **93–94.** During the Course of Negotiations before this Adalat the Tax is now reduced to Rs.**4000**/–. The arrears of Tax if any shall be paid in three months time. There shall be an increase of 25% raising the Tax to Rs.**5000**/– w.e.f **1.10.98.** The award is passed accordingly.

இவ்வழக்கு லோக் அதாலத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவரது வீட்டிற்கான பழைய வரி விதிப்பு எண்.**018/5518**, புதிய வரிவிதிப்பு எண்.**018/012/00018** இந்த வரிவிதிப்பிற்கு **1995–1996** முதல் **2021–2022** வரை நிலுவை ரூபாய். **863531/–** உள்ளது. லோக் அதாலத் தீர்ப்பின் படி **1995–1996** முதல் அரையாண்டிற்கு ரூபாய்.**4000/–** வீதமும், **01.10.1998** முதல் அரையாண்டிற்கு ரூபாய்.**5000/–** வீதமும் கணினியில் கேட்பினை திருத்தி, திருத்திய கேட்பில் வசூல் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**1)** தற்போது வரி சீராய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், லோக அதாலத் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நிலுவை கேட்பினை திருத்திடவும், திருத்திய கேட்பில் நிலுவைத் தொகையினை வசூல் செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** இவ்வரிவிதிப்பினை வழக்கு தலைப்பு (Litigation) லிருந்து வசூலிக்கத்தக்க தலைப்பு (Collectable) ஆக மாற்றம் செய்து வசூலிக்கலாம்.

**3)** நிர்வாக நலன் கருதி இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், நிலுவை கேட்பினை தீர்ப்பின் அடிப்படையில் திருத்தம் மேற்கொள்ளவும், நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு வழி நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு உரிய பிரேரணை அனுப்பி வைத்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்.1690/2018/அ1)**

**தீர்மான எண்.99 நாள். 10.06.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்–10**

நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**30614**/ஆர்**1/2021** நாள்.**04.05.2022** ல் வழங்கப்பட்ட அறிவுரைகளில், **31.03.2022** ம் தேதியில் பெருமளவில் நிலுவையாக உள்ளதாகவும், சொத்து வரி நிலுவைகளை முழு அளவில் வசூல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நிலுவை வரி விதிப்புதார்கள் ஒவ்வொருவரும் நிலுவைகளை **31.05.2021** க்குள் செலுத்திட அறிவுறுத்தி தனித்தனியாக அறிவிப்புகள் அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அனுப்பப்படும் ஒவ்வொரு சிறப்பு அறிவிப்பிற்கும் ஒப்புகை (Registered Post with Acknowledgement) பெறுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிறப்பு அறிவிப்பு வழங்கியும் வரி செலுத்திட தவறும் வரி விதிப்புதாரர்கள் மீது தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** அட்டவணை IV குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நகராட்சியினை பொறுத்த வரை 31.03.2022 அன்று சொத்து வரி இனங்களில் மட்டும் சுமார் 4395 வரிவிதிப்புகளில் ரூபாய்.434.59 இலட்சங்கள் வசூல் செய்யப்பட வேண்டி உள்ளது. இதில் 50 வரி விதிப்புகள் வழக்கிற்குட்பட்டுள்ளது (litigation). ஒவ்வொரு வரி விதிப்புதாரருக்கும் பதிவுத் தபால் ஒப்புகையுடன் அறிவிப்பு அனுப்பி வைக்கும் பட்சத்தில் ஒரு தபாலுக்கு தோராயமாக ரூபாய் 25 முதல் ரூபாய்.30 என்னும் விகிதத்தில் செலவினம் ஏற்படுகிறது. நிர்வாக நலன் கருதி நகராட்சியில் மேற்குறிப்பிடப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் வசூல் நடவடிக்கைகள் துரிதப்படுத்திடும் பொருட்டு மேற்தெரிவிக்கப்பட்டவாறு அனைத்து சொத்து வரி நிலுவை வரி விதிப்புதாரர்களுக்கும் பதிவு அஞ்சல் மூலம் ஒப்புதகையுடன் சிறப்பு அறிவிப்பு அனுப்பி வைக்கும் பொருட்டு அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூபாய்.1,32,000/—த்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1) நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.30614/ஆர்1/2021 நாள்.04.05.2022 யினை மன்றம் பதிவு செய்யலாம்.
2) நிர்வாக நலன் கருதி நகராட்சி வரி வசூல் நடவடிக்கைகளை துரிதப்படுத்தப்படுத்தி, நிலுவை சொத்து வரியினங்களில் சொத்து வரியினை வசூலிக்கும் பொருட்டு பதிவு அஞ்சல் மூலம் ஒப்புதகையுடன் சிறப்பு அறிவிப்பு அனுப்பி வைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ள அதற்காகும் தோராய செலவினம் ரூபாய்.1,32,000/—க்கும் மன்றம்அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். /2022/அ1)

**தீர்மான எண்.100 நாள். 10.06.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்—11

செங்கல்பட்டு நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவு துறை அதிகாரிகளை மற்றும் நகரமன்ற தலைவர் அவர்களையும் நிர்வாக ரீதியாக தொடர்பு கொள்ள ஏதுவாக Intercom வசதி அமைக்கவும், அதற்கான செலவுத்தொகை ரூ.2.14 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு—

மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.969/2022/இ1

**தீர்மான எண்.101 நாள். 10.06.2022**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்–12

**நகரமன்ற தலைவர் திருமதி.ந.தேன்மொழி நரேந்திரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட கடிதம் தீர்மானம் இயற்றும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

செங்கையில் கொடைவள்ளலாகவும், செங்கல்பட்டு நகர சபை மாமன்றத்தின் முடிசூடா மன்னனாக தொடர்ந்து 29 ஆண்டுகள் பதவி வகித்தவரும், செங்கல்பட்டு கலை கல்லூரி, மருத்துவமனை, மருத்துவக்கல்லூரி, சட்டக்கல்லூரி, செவிலியர் கல்லூரி, நகராட்சி அலுவலகம் ஆகியவற்றிற்கான நிலங்கள் வழங்கியும், கட்டிடங்கள் கட்டி கொடுத்தும் இன்னும் ஏராளமான நிலங்களை தானம் செய்த, நமது செங்கை நகர தந்தை. தெய்வத்திரு.ராவ்பகதூர் வேதாசலம் ஐயா அவர்களையும், அவர்களது துணைவியார் இராஜேஸ்வரி வேதாசலம் அம்மா ஆகியோரது பெருமைகளை நிலைநாட்டு வண்ணம், வளர்ந்து வரும் இளைய சமுதாயத்திற்க்கும், நமது செங்கை நகர பொது மக்களும் அறியும் வண்ணம் மாபெரும் 3 அம்ச கோரிக்கைகளை, அரிமா சங்கம், ரோட்டரி சங்கம், நடப்போர் நலவாழ்வு சங்கம், வணிகர் சங்கங்கள், சமூக ஆர்வலர்கள், பத்திக்கை ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கொண்டு வந்த கீழ்காணும் 3 அம்ச கோரிக்கைளை தீர்மானமாக இயற்றி இதனை அரசுக்கு அனுப்பி உரிய அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**<u>3– அம்ச கோரிக்கைகள்</u>**

1. ராவ் பகதூர் வேதாசலம் ஐயா அவர்களது பிறந்தநாளான மே–17–ம் நாளை அரசு விழாவாக தமிழக அரசு தொடர்ந்து கொண்டாட வேண்டும்.
2. செங்கல்பட்டு அமைந்துள்ள அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவ கல்லூரிக்கும் அம்மா இராஜேஸ்வரி வேதாசலம் பெயரை சூட்ட வேண்டும்.
3. வள்ளல் தம்பதியினருக்கு செங்கல்பட்டு மைய பகுதியில் மணி மண்டபம் அரசு கட்டித்தர கோருதல்.

**தீர்மான எண்.102 நாள். 10.06.2022**

நகர மன்ற தலைவர் திருமதி.ந.தேன்மொழி அவர்களால் கொண்டுவரப்பட்ட பொருள்கள் குறித்து மன்றத்தில் பரிசிலிக்கப்பட்டதின் படி கீழ் கண்டுள்ள 3 கோரிக்கைகள் குறித்து அரசுக்கு உரிய பிரேரனையை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் வழியாக அனுப்பி உரிய அனுமதி பெற்ற பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

1. ராவ்பகதூர் வேதாசலம் அய்யா அவர்களது பிறந்தநாளான மே–17–ம் நாளை அரசு விழாவாக தமிழக அரசு தொடர்ந்து கொண்டாட வேண்டும் என்றும்
2. செங்கல்பட்டு நகரில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரிக்கும் அம்மா ராஜேஸ்வரி வேதாசலம் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டும் என்றும்
3. வள்ளல் தம்பதியினருக்கு செங்கல்பட்டு மையப்பகுதியில் மணி மண்டபத்தினை அரசு கட்டித்தர வேண்டுமென கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

பொருள்–13

**நகரமன்ற தலைவர் திருமதி.ந.தேன்மொழி நரேந்திரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட கடிதம் தீர்மானம் இயற்றும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

செங்கல்பட்டு நகரம் மாவட்டத்தில் தலை நகரமாக அமைந்துள்ளது. இங்கு தோராயமாக 1 இலட்சத்திற்கு மேல் மக்கள் வசித்து வருகின்றனர். மேலும் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அடையாளம் தெரியாத பிரேதங்களும், கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடும் அனைத்து பிரேதங்களும் தற்போது செங்கல்பட்டு நகரில் உள்ள சுடுகாடுகளில் உடனுக்குடன் புதைக்கப்பட்டும், எரிக்கப்பட்டும் வருகிறது. இந்நிலையில் இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டுள்ள சுடுகாடுகள் சரியான பராமரிப்பு இன்றி உள்ளது.

1. பழவேலி சுடுகாடு
2. இராமபாளையம் சுடுகாடு
3. நத்தம் சுடுகாடு

மேலும் இந்த இடத்திற்கு போதிய பாதுகாப்பு இல்லாததால் தனி நபர்கள் ஆக்கிரமனம் செய்யும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே தனிநபர்களிடம் இருந்து மேற்படி சுடுகாடுகளை காப்பாற்றும் வண்ணம் இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை நகராட்சி மூலம் உடனடியாக நடவடிக்கை எடுத்து தேவையான மதிப்பீடு தயார் செய்து பணி மேற்கொள்ள தீர்மானம் இயற்றுவது குறித்து.

**தீர்மான எண்.103 நாள். 10.06.2022**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பழவேலி சுடுகாடு, இராமபாளையம் சுடுகாடு மற்றும் நத்தம் சுடுகாடு ஆகியவற்றினை தனி நபர்கள் ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாக்க வேண்டி, போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

பொருள்–14

**நகரமன்ற தலைவர் திருமதி.ந.தேன்மொழி நரேந்திரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட கடிதம் தீர்மானம் இயற்றும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

தமிழகத்தின் தானைதலைவரும் அரசியலில் ஆசானாக விளங்கியவரும் 1969 முதல் 1971 வரை முதல் முறையாகவும், 1971 முதல் 1976 வரை இரண்டாவது முறையாகவும், 1989 முதல் 1991 வரை மூன்றாம் முறையாகவும், 1996 முதல் 2001 வரை நான்காவது முறையாகவும், 2006 முதல் 2011 வரை ஐந்தாம் முறையாகவும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவி வகித்தவரும் ஆட்சியின் காலத்தில் கீழ்கண்டுள்ள சாதனைகளை செய்த சாதனையாளரும்.

1. மனிதனை வைத்து மனிதன் இழுத்த கை ரிக்ஷாக்களை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கியது.
2. பார்வை இழந்தோர்க்கு இலவசக் கண்ணொளி வழங்கியது.
3. பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் கொண்டு வந்தது.

4. விவசாயிகளுக்கு நெசவாளர்களுக்கு இலவச மின்சார திட்டம் நிறைவேற்றியது.
5. பெண்களுக்கு சொத்துரிமைச் சட்டம், வேலையில் 30% ஒதுக்கீடு செய்தது.
6. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகச் சட்டம் நிறைவேற்றியது.
7. குடிசை மாற்று வாரியம் கொண்டு வந்தது.
8. குடிநீர் வாரியம் கொண்டு வந்தது.
9. ஆதி திராவிடருக்கு இலவச வீடுகள் வழங்கும் திட்டம்
10. மலம் சுமக்கும் துப்புரவுத் தொழிலாளர் மறுவாழ்வுக்கு மாற்றுத் திட்டம் கொண்டு வந்தது.

நேர்மையான, கண்ணியமான ஆட்சி செய்தவரும் தமிழக மக்களின் உயிர் மூச்சாக விளங்கியவரின் தனது ஆயுள் காலத்தை தமிழக மக்களுக்கு அர்பணித்தவருமான தமிழக முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு திரு.மு.கருணாநிதி அவர்களுக்கு இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள காலியிடத்தில் முழுஉருவ சிலை திறக்க உரிய அனுமதியினை அரசிடம் இருந்து பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானம் இயற்றுவது குறித்து.

**தீர்மான எண்.104 நாள். 10.06.2022**

நகராட்சி தலைவர் திருமதி.ந.தேன்மொழி அவர்களால் கொண்டுவரப்பட்ட, இப்பொருள் குறித்து நகரமன்றத்தில் கீழ் கண்டுள்ளவாறு ஏகமனதாக தீர்மானம் இயற்றப்பட்டது. இதன் படி உரிய பிரேரணையை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் வழியாக அரசுக்கு அனுப்பி உரிய அனுமதி மற்றும் வழிகாட்டுதலை பெற்ற பிறகு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

1. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலை அமைக்க அனுமதி கோரும் இடம் – செங்கல்பட்டு நகராட்சி
2. இடத்தின் அளவு – "10 x 10"
3. சிலையின் உயரம் – 6 அடி
4. எத்தன்மையிலான சிலை – ஃபைபர்
5. பராமரிப்பு பணிகள் – நகராட்சி

முழு உருவ சிலை/மார்பக அளவு சிலை – முழு உருவ சிலை

பொருள்–15

**1–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.G.தமிழ்ச்செல்வன் அவர்களால் கொண்டு வரப்பட்ட கடிதம் தீர்மானம் இயற்றும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. செங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட 1–வது வார்டு களத்து மேட்டுத் தெரு SRK தியேட்டர் பின்புறம் நீண்ட கழுவுநீர் கால்வாய் மற்றும் கல்வெட்டு சிதலமடைந்துள்ளது. இந்த கல்வெட்டு மற்றும் கால்வாயினை தூர்வாரி மீண்டும் புணரமைத்து தர திட்ட மதிப்பீடல் செய்து பணியினை நிலைவேற்ற கோருதல்.

2. 1–வது வார்டு பகுதியில் உள்ள அனைத்து கழுவுநீர் கால்வாய்களும் மண் மற்றும் குப்பைகள் நிறைந்துள்ளது. அதனை அகற்றி தரவும் அனைத்து கால்வாய்களையும் தூர்வாரி மழைக்காலம் முன்பாக சுத்தம் செய்து தர திட்ட மதிப்பீடு தயார் செய்து பணி நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மான எண்.105 நாள். 10.06.2022**

வரிசை எண் 1 மற்றும் 2–ல் கண்டுள்ள பணிகளை நகராட்சியின் நிதி நிலைமைக் கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பொறியாளர் நேராய்வு செய்து உரிய மதிப்பீடு செய்து பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

பொருள்–16

**10–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.S.புஷ்பராணி அவர்களால் கொண்டு வரப்பட்ட கடிதம் தீர்மானம் இயற்றும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. 10–வது வார்டில் உள்ள கால்வாய்கள் மற்றும் தெருக்கள் சீரமைத்து தர கோருதல்
2. கே.கே தெருவில் உள்ள வணிக தெரு பகுதி மற்றும் புதியதாக சேர்க்கப்பட்டுள்ள தட்டான் மலை தெருவில் உள்ள கால்வாய்களை சீரமைத்து தர கோருதல்.
3. மேலும் 10–வது வார்டில் 6 EB கம்பங்கள் மற்றும் தண்ணீர் வசதி, 4 போர்வெல் அமைத்து தர கோருதல் மேலும் மின் இணைப்பு இல்லாத பகுதியில் மின் இணைப்பு பெற தீர்மானம் இயற்றி தர கோருதல்.

**தீர்மான எண்.106 நாள். 10.06.2022**

வரிசை எண் 1 மற்றும் 2–ல் கண்டுள்ள பணிகளை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பொறியாளர் நேராய்வு செய்து உரிய மதிப்பீடு செய்து பணி மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

3.வரிசை எண்.4, (a) மின் இணைப்பு 6 மின் கம்பங்கள் பெற உரிய முறையில் பொறியாளர் மூலம் மின்சார துறைக்கு கடிதம் அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டது. (b) 4 போர்வெல் அமைக்க வேண்டி பொறியாளர் அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

பொருள்–17

**15–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.S.rதீஷ் அவர்களால் கொண்டு வரப்பட்ட கடிதம் தீர்மானம் இயற்றும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. 15–வார்டில் நகராட்சிக்கு சொந்தமான தந்தை பெரியார் வளாகத்தில் இயங்கி வரும் அக்ஷயபவன் கட்டிடம் மிகவும் உறுதியற்ற நிலையில் இருப்பதால் இங்கு சாப்பிட வரும் பொது மக்களுக்கு உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது. மேலும் கட்டிடத்திற்கு பின்புறம் இருந்த DTCP அலுவலகம் 10 வருடத்திற்கு முன் இடித்து தரைமட்டம் ஆக்கப்பப்பட்டது. மேலும் இந்த இரண்டு கட்டிடங்களும் ஒரே வருடத்தில் கட்டப்பட்ட

கட்டிடம் ஆகும். மேலும் இந்த காலி இடத்தில் வாகனம் நிறுத்தும் இடமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

2. எனவே இக்கடிடத்தினை ஆய்வு செய்து இக்கட்டிடத்தினை காலி செய்யவும் இதற்கு ஆணையர் மற்றும் நகரமன்ற தலைவர் மூலம் Technical Committee அமைத்து அதில் என்னையும் ஒரு உறுப்பினராக சேர்க்கவும் பொது மக்களை காப்பாற்று வண்ணம் தீர்மானமாக இயற்றி தருமாறு கோரியுள்ளார்.
3. எனது 15–வது வார்டில் புதிய பேரூந்து நிலையம் எதிரில் உள்ள செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான தந்தை பெரியார் வளாகத்தில் இயங்கி வரும் ஹோட்டல் அக்ஷயபவன் கட்டிடத்திற்கு பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தை அக்ஷயபவன் ஹோட்டல் உரிமையாளர்கள் ஆக்கிரமித்து அதில் சுமார் 450 சதுர அடி பரப்பளவு கட்டிடத்தை அவர்கள் உபயோகத்திற்கு கட்டியுள்ளனர். இந்த கட்டிடமானது நகராட்சி சார்பாக நகராட்சியினால் கட்டப்பட்டதா அல்லது அவர்கள் ஆக்கிரமித்து கட்டியுள்ளனரா என்பதை தெளிவுப்படுத்தமாறு கேட்டுக்கொள்கிறேன் மற்றும் இவர்கள் ஹோட்டலுக்கு பின்னால் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தை தங்கள் ஹோட்டலுக்கு வரும் வாடிக்கையாளர்களை கார் பார்க்கிங் இடமாகவும் பயன்படுத்தி வருகின்றனர். இதற்கு நகராட்சி சார்பில் ஏதாவது அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும் தெளிவுப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் இது சம்மந்தமான புகைப்படங்களை இணைத்துள்ளேன். இது சம்மந்தமாக நகரமன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர் இதனை ஆய்வு செய்து சம்மந்தப்பட்ட நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் இதனை தீர்மானமாக இயற்றி தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மான எண்.107 நாள். 10.06.2022**

ஒத்திவைக்கப்பட்டது

**பொருள்–18**

**16–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.S.ரமேஷ் அவர்களால் கொண்டு வரப்பட்ட கடிதம் தீர்மானம் இயற்றும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. 16–வது வார்டுக்குட்பட்ட அளகேசன் தெருவில் மாநில நெடுஞ்சாலை K.R.C பணிமணை முதல் சாரதா லாட்ஜ வரையில் உள்ள மழைநீர் கால்வாய் துர்ந்து மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்ல வழியில்லாததால் மழைகாலங்களில் வேதாசல நகர் பகுதியில் வீடுகளுக்குள் புகுந்து பெரிதும் பாதிப்பு ஏற்படுத்துகின்றது. எனவே இதனை சரிசெய்யுமாறு கோரியுள்ளார்.
2. வரதனார் தெரு, ஜி.எஸ்.டி சாலை சந்திப்பில் உள்ள கால்வாய் மற்றும் தேவராஜனர் தெரு பெரிய மணியக்கார தெரு சந்திப்பு கால்வாய் ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி கால்வாய்களை சரிசெய்து தர கோரியுள்ளார்.
3. மழை காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கு செங்கல்பட்டு இரயில்வே தடங்களில் உள்ள பாலங்கள் வழியாக கொளவாய் ஏரிக்கு செல்லும் பாதையில் உள்ள பாலங்கள் சிறியதாக உள்ளதால். மழைநீர் வடியாமல் நெடுஞ்சாலை மற்றும் வேதாசல நகர் பகுதியில் உள்ள வீடுகளுக்குள் மழைநீர் புகுந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதால் இதனை நமது பாராளுமன்ற உறுப்பினர் மூலமாகவும் இரயில்வே நிர்வாகத்திற்கு இத்தீர்மானத்தை நிறைவேற்றி பாலங்களை சரிசெய்ய கோரியுள்ளார்.

**தீர்மான எண்.108 நாள். 10.06.2022**

வரிசை எண் 1 (ம) 2—ல் கண்டுள்ள பணிகளை பொறியாளர் நேராய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

வரிசை 3—ல் கண்டுள்ள நடவடிக்கை குறித்து ஆணையர் அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள்—19

**17—வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.B.வினோத்குமார் அவர்களால் கொண்டு வரப்பட்ட கடிதம் தீர்மானம் இயற்றும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

17—வது வார்டு பெரிய மணியக்காரத் தெருவில் கதவு எண்.61 தொடங்கி உள் அடங்கிய சந்து பகுதி 50 மீட்டர் அளவுக்கும் கதவு எண்.67 தொடங்கி உள் அடங்கி சந்து பகுதி 50 மீட்டர் சாலை பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதனை சிமெண்ட் சாலையாக அமைத்து தர கோரியுள்ளார்.

**தீர்மான எண்.109 நாள். 10.06.2022**

நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணியினை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

பொருள்—20

**24—வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.K.சரிதா குமார் அவர்களால் கொண்டு வரப்பட்ட கடிதம் தீர்மானம் இயற்றும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. 24—வது வார்டில் நியாய விலை கடை கட்டிடம் கட்டித்தர கோரியுள்ளார்.
2. 24—வது வார்டில் திருக்கழுக்குன்றம் சாலையில் அங்கமுத்து திரையரங்கம் அருகில் உள்ள மழைநீர் கால்வாய் பழுதடைந்த நிலையில் உள்ளதால். அதனை சரிசெய்து தருமாறு கோரியுள்ளார்.
3. 24—வது வார்டில் ராட்டிண கிணறு, திருக்கழுக்குன்றம் சாலையில் ICICI வங்கியில் இருந்து J.P வணிக வளாகம் வரை உள் பகுதியில் புதிய மழைநீர் கால்வாய் அமைத்து தர கோரியுள்ளார்.

**தீர்மான எண்.110 நாள். 10.06.2022**

வரிசை எண் 1 முதல் 3 வரையிலான பணிகளை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணியினை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

பொருள்–21

**26–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.வ.தனசேகரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட கடிதம் தீர்மானம் இயற்றும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. 26–வது வார்டில் காமராஜர் 3–வது தெருவில் கோகுலபுரம் பகுதியில் உள்ள சாலையானது மிகவும் பழுதடைந்து உள்ளது மற்றும் மழைநீர் வடிகால் வசதியும் இல்லாததால் பொது மக்கள் மிகவும் சிரமத்திற்க்கு ஆளாகின்றனர். எனவே இங்கு புதிய கல்வெட்டு அமைத்து தருமாறு கோரியுள்ளார்.

2. 26–வது வார்டுக்குட்பட்ட பாரதியார் தெருவில் உள்ள சாலையானது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இதனை சரிசெய்தும் மற்றும் கல்வெட்டு அமைத்து தருமாறு கோரியுள்ளார்.

**தீர்மான எண்.111 நாள். 10.06.2022**

வரிசை எண் 1 (ம) 2–ல் கண்டுள்ள பணிகளை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

பொருள்–22

**32–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.G.காஞ்சனா அவர்களால் கொண்டு வரப்பட்ட கடிதம் தீர்மானம் இயற்றும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

1. 32–வது வார்டில் அளகேச நகரில் உள்ள பழுதடைந்த குடிநீர் மேல்நிலை தொட்டி (Water tank) இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்த கோருதல்
2. அளகேச நகரில் பழுதடைந்து உள்ள குடிநீர் வால்வு தொட்டிகள் 6 எண்ணிக்கை புதியதாக அமைத்து தர கோருதல்.
3. அளகேச நகரில் குடிநீர் சப்ளை செய்யும் பைப் லைன் பெரியார் நகர் முதல் ஆர்.வி தெரு, EB Office சந்து வரை பழுதடைந்துள்ளதை புதியதாக மாற்றி தர கோருதல்.

**தீர்மான எண்.112 நாள். 10.06.2022**

வரிசை எண் 1,2 மற்றும் 3–ல் கண்டுள்ள பணிகளை நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பொறியாளர் அவர்கள் உடன் நேராய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

**நகரமன்ற தலைவர்,**
**செங்கல்பட்டு நகரமன்றம்**